# ஏப்ரல் – 10 – புதன்

தூய புல்பர்ட்

"..உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் " – யோவான் 8 : 31 - 32

## முதல் வாசகம் : தானியேல் 3 : 14 – 20, 24 – 25, 28

அந்நாட்களில், நெபுகத்னேசர் அவர்களை நோக்கி, "சாத்ராக்கு! மேசாக்கு! ஆபேத்நெகோ! நீங்கள் மூவரும் என் தெய்வங்களை வணங்கவில்லை என்பதும், நான் நிறுவிய பொற்சிலையைப் பணிந்து தொழவில்லை என்பதும் உண்மைதானா? இப்பொழுதாவது எக்காளம், நாதசுரம், யாழ், கின்னரம், வீணை, பைக்குழல் முதலிய எல்லாவகை இசைக் கருவிகளும் ஒலிக்கக் கேட்டவுடன், நீங்கள் தாழ வீழ்ந்து நான் செய்துவைத்துள்ள சிலையைப் பணிந்து தொழத் தயாராயிருக்கிறீர்களா? தொழாவிட்டால் அந்த நொடியிலேயே எரிகிற தீச்சூளையில் தூக்கிப் போடப்படுவீர்கள். உங்களை என் கைகளிலிருந்து தப்புவிக்கக்கூடிய தெய்வம் ஒன்று உண்டோ?" என்றான். சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்இ நெகோ என்பவர்கள் செபுகத்னேசர் அரசனை நோக்கிப் பதில்மொழியாக, "இதைக் குறித்து நாங்கள் உமக்கு மறுமொழி கூறத்தேவையில்லை. அப்படியே எதுநிகழ்ந்தாலும், நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள், எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர். அவரே எங்களை உம்கையினின்றும் விடுவிப்பார். அப்படியே அவருக்கு மனமில்லாமல் போனாலும், அரசரே! நாங்கள் உம்முடைய தெய்வங்களை வழிபடமாட்டோம் நீர் நிறுவிய பொற்சிலையையும் நாங்கள் தொழப்போவதில்லை. இது உமக்குத் தெரிந்திருக்கட்டும்" என்றார்கள். இதைக்கேட்ட நெபுகத்னேசர் அரசன் சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோர்மீது வெகுண்டெழ, அவனது முகம் சினத்தால் சிவந்தது. வழக்கத்தைவிட ஏழு மடங்கு மிகுதியாகத் தீச்சூளையைச் சூடாக்கும்படி அரசன் கட்டளை யிட்டான். பின்னர் சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோரைக் கட்டி, எரியும் தீச்சூளைக்குள் தூக்கிப் போடுமாறு தன் படைவீரர்களுள் வலியவர் சிலருக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது நெபுகத்னேசர் அரசன் வியப்புற்று விரைந்தெழுந்து தன் அமைச்சரை நோக்கி, "மூன்று பேரைத்தானே கட்டி நெருப்பினுள் எறிந்தோம்!" என்றான். "ஆம் அரசரே" என்று அவர்கள் விடையளித்தனர். அதற்கு அவன், "கட்டவிழ்க்கப்பட்டவர்களாய் நெருப்பின் நடுவில் நான்கு பேர் உலவுகிறதை நான் காண்கிறேன்! அவர்களுக்கோ ஒரு தீங்கும் நேரவில்லையே! மேலும் நான்காவது ஆள் தெய்வ மகன் ஒருவன்போல் தோன்றுகிறானே!" என்றான். அப்பொழுது நெபுகத்னேசர், "சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ ஆகியோரின் கடவுள் புகழப்படுவாராக! தங்கள் கடவுளைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பணிந்து தொழ மறுத்து, அரசனது கட்டளையையும் பொருட்படுத்தாமல், அவர்மேல் நம்பிக்கை வைத்துத் தங்கள் உடலைக் கையளித்த அவருடைய ஊழியர்களை அவர் தம் தூதரை அனுப்பி மீட்டருளினார்.வர் சிலருக்குக் கட்டளையிட்டான்.

**பதில்பாடல் :** என்றென்றும் அவரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

## நற்செய்தி : யோவான் 8 : 30 - 42

அக்காலத்தில், இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள். உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்றார். யூதர்கள் அவரைப் பார்த்து, ""உங்களுக்கு விடுதலை கிடைக்கும்" என நீர் எப்படிச் சொல்லலாம்? நாங்கள் யாருக்கும் ஒருபோதும் அடிமைகளாய் இருந்ததில்லை. நாங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் ஆயிற்றே!" என்றார்கள். அதற்கு இயேசு, "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். வீட்டில் அடிமைக்கு நிலையான இடம் இல்லை மகனுக்கு அங்கு என்றென்றும் இடம் உண்டு. மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என் வார்த்தை உங்கள் உள்ளத்தில் இடம் பெறாததால் நீங்கள் என்னைக் கொல்ல முயலுகிறீர்கள். நான் என் தந்தையிடம் கண்டதைச் சொல்கிறேன். நீங்கள் உங்கள் தந்தையிடமிருந்து கேட்டதைச் செய்கிறீர்கள்" என்றார். அவர்கள் அவரைப் பார்த்து, "ஆபிரகாமே எங்கள் தந்தை" என்றார்கள். இயேசு அவர்களிடம், "நீங்கள் ஆபிரகாமின் மக்கள் என்றால் அவரைப் போலச் செயல்படுவீர்கள். ஆனால் கடவுளிடமிருந்து கேட்டறிந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை நீங்கள் கொல்ல முயலுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே! நீங்கள் உங்கள் தந்தையைப் போலச் செயல்படுகிறீர்கள்" என்றார். அவர்கள், "நாங்கள் பரத்தைமையால் பிறந்தவர்கள் அல்ல் எங்களுக்கு ஒரே தந்தை உண்டு கடவுளே அவர்" என்றார்கள். இயேசு அவர்களிடம் கூறியது "கடவுள் உங்கள் தந்தையெனில் நீங்கள் என்மேல் அன்பு கொள்வீர்கள். நான் கடவுளிடமிருந்தே இங்கு வந்துள்ளேன். நானாக வரவில்லை அவரே என்னை அனுப்பினார்" என்றார்.

**தியானம்:** எமது சொல், செயல் நடத்தையில் உண்மை இருக்கவேண்டுமென மூத்தோர்கள் சொல்வார்கள். ஆயினும், "நானே வழியும், ஒளியும், உண்மையும்" என்றுரைத்த இயேசு "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32) என்பதனால் ஆண்டவர் இயேசுவே உண்மையென நற்செய்தி படிப்பிக்கிறது. "உண்மைக்குச் சாட்சியம் பகரவே இவ்வுலகிற்கு வந்தேன்" என்றவர் "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" எனப்போதிப்பதேன்? என வேறுவிதமாகச் சிந்திக்கவும் அழைக்கப்பட்டுள்ளோம். நற்செய்தி குறிப்பிடும் விடுதலை அரசியல் - சமூக - பொருளாதார – கலாச்சா விடுதலை அல்ல. மாறாக, ஆன்மா தழுவிய உண்மையான விடுதலை எனப்படுவது எமது ஆன்மீக வாழ்விலும் - சமூக வாழ்விலும் உருவாகவேண்டியது. இவ்விடுதலை வெறும் வாய்ப்பேச்சளவில் அல்ல மாறாக, எமது செயல்வடிவில் உருப்பெறவேண்டும். அவ்வாறான விடுதலை நித்திய வாழ்விலும் எமக்கு விடுதலையை வழங்கவல்லது என்பதனை இயேசு குறிப்பிடுகின்றார். பொய்மை பெருத்து உண்மை மெலிந்து - பித்தலாட்டமும் - ஏமாற்றமும் ஏற்றம் பெற்றுள்ள எம் வாழ்வில் உண்மையான ஆன்மீக விடுதலையை நாம் தேடுகின்றோமா? இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் தமது 10 – 02 - 2014 திகதிய ருவிட்டர் செய்தியில் "இயேசு என்னும் ஒளியை அனைவருக்கும் எடுத்துச்செல்லும் பொருட்டு ஒவ்வொரு கிறிஸ்தவனும் அணைந்துபோன விளக்குகளாக இல்லாமல் ஒளிர்விடும் விளக்குகளாக செயல்படவேண்டும்" எனக்குறிப்பிட்டுள்ளார். தாம் படைத்த மனிதனுக்கு விடுதலை வழங்கவே தமது ஒரே மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பியதால் உண்மையான கடவுள் எனப்படுபவர் அன்பின் வடிவமாக எமக்குத் தரப்படுகின்றார். அதனாலேயே ஆண்டவர் இயேசு தம்மை "நானே வழியும் ஒளியும் உண்மையும்" (யோவான் 14:6) எனப்பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். ஆதலால், இத்தவக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் உண்மையான கடவுளென ஆண்டவர் இயேசுவை நம்புவோர் இவ்வுலகில் மட்டுமல்ல மறுவுலகிலும் விடுதலை பெறுவர். அவ்வாறான விடுதலையின் அனுபவத்தை எமக்குள்ளே மட்டுமல்ல - அல்லது எமது குடும்பங்களில் மட்டுமல்ல - மாறாக நாம் வாழும் சமூகத்திலும் பகிர்ந்துவாழ முன்வருவோமா? தகுந்த பாவப்பொறுத்தல் அருட்சாதனத்தைப் பெற்று உண்மையான ஆன்மீக விடுதலையைப்பெற முன்வருவோம்.